# பொன்னேரி நகராட்சி
# நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத்தலைவர் திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் **2023** ஆம் ஆண்டு மே மாதம் **31.05.2023** புதன்கிழமை முற்பகல் **11.00** மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் .

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

**பொருள் எண் 1**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் ஏப்ரல் **2023** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மான எண்: 222 நாள்: 31.05.2023

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்படுகிறது .**

**பொருள் எண் 2**

பொன்னேரி நகராட்சியில் **மாநில பேரிடர் தணிப்பு நிதி (SDMF) 2023–24–**ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள **26.04.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | பொன்னேரி இரயில்வே நிலைய சாலையில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 92.00 | வி.குமார், டி.வி.புரம் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | மலர்விழி கன்ஸ்ட்ரக்ஷன், வேம்பேடு | மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் புதிய தேரடி தெரு முதல் தாலுகா அலுவலக சாலை வரை மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 144.00 | E.அருண்ராஜ், பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன், பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 951 /2022 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 223 நாள்: 31.05.2023

**தீர்மானம்: மன்றம் ஒப்புதல் வழங்கப்படுகிறது .**

பொருள் எண் 3

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி **2023–24–ல்** கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள **05.05.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | தேர் வீதி உலா செல்லும் மாட வீதிகளான நீலி அப்பாதுரை தெரு, தண்டபாணி தெரு, ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் கொண்டு சாலையினை அகலப்படுத்துதல். | 9.00 | பிரகாஷ் பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன், பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | 7வது வார்டு கள்ளுக்கடைமேடு குறுக்கு தெருவில் ரப்பீஷ் கொட்டி சாலையின் உயரத்தை அதிகப்படுத்துதல் | 2.00 | பிரகாஷ் பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன் பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 104 /2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 224 நாள்: 31.05.2023

**தீர்மானம்: ஒப்புதல் வழங்கப்படுகிறது .**

பொருள் எண் 4

பொன்னேரி நகராட்சியில் **மாண்புமிகு முதலமைச்சரின் (காலை சிற்றுண்டிவழங்கும் திட்டம்) 2022–23–ன்** கீழ் உணவு சப்ளை செய்யும் பணி மேற்கொள்ள **18.05.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|
| 1 | மாண்புமிகு முதலமைச்சரின் காலை சிற்றுண்டிவழங்கும் திட்டத்திற்காக பொன்னேரி 2 கிராமம் சர்வே எண். 529/2–ல் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சமையற்கூடத்திற்கு உணவு சப்ளை செய்தல் | ஆருத்ரா கார்ப்பரேஷன் | குறைந்த விலைப்புள்ளி |
| | | Max Safety | அதிக விலைப்புள்ளி |

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 223/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 225 நாள்: 31.05.2023

**தீர்மானம்: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**பொருள் எண் 5**

பொன்னேரி நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சரின் காலை சிற்றுண்டிவழங்கும் திட்டத்திற்காக பொன்னேரி 2 கிராமம் சர்வே எண். 529/2–ல் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சமையற்கூடத்தின் பயன்பாட்டிற்காக ஆழ்துளை கிணறு மற்றும் மின்மோட்டார் அமைக்கவும், , அதற்கான உத்தேச செலவினம் ரூ. 4.50/- இலட்சத்திற்கு நகர்மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
( ந.க.எண். 223 /2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 226 நாள்: 31.05.2023

**தீர்மானம்: அனுமதி வழங்கப்படுகிறது .**

**பொருள் எண் 6**

பொன்னேரி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 ன்கீழ் பஞ்செட்டி சாலை குப்பை கிடங்கில் உள்ள குப்பைகளை உயிரியல் செயலாக்கம் முறையில் (Bio-mining) அப்புறப்படுத்துதல் (சர்வே எண் 337/5) பணி நடைபெற்று வருகிறது. மேற்படி இடத்திற்கு மின்இணைப்பு வழங்க மின்சார வாரியத்திடமிருந்து வரப்பெற்ற கேட்பு கட்டணம் ரூ.96,500/- மற்றும் அவ்விடத்தில் 50 HP திறன் கொண்ட மோட்டாரினை இயக்க வேண்டியுள்ளதால் அதற்கேற்றாற்போல் அவ்விடத்தில் கூடுதலாக மின்மாற்றி ஒன்று அமைக்கவும் , மின்கம்பிகள் கூடுதலாக அமைக்கவும் மின்சார வாரியத்திடமிருந்து வரப்பெற்ற கேட்பு கட்டணம் ரூ. 1,65,960/- ஐ நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று செலுத்தியதற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 262/2022 / அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 227 நாள்: 31.05.2023

**தீர்மானம்: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**பொருள் எண் 7**

பொன்னேரி நகராட்சியில் உள்ள 1257 எண்ணிக்கையிலான குழல் விளக்குகள் மற்றும் 634 எண்ணிக்கையிலான CFL தெருமின்விளக்குகளை மின் சேமிப்பின் அவசியம் மற்றும் பயனீட்டு மின்கட்டணங்களை குறைக்கும் வகையில் LED தெருமின் விளக்குகளாக மாற்றியமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கு உரிய பொருட்கள் கொள்முதல் செய்யப்படும்போது அவற்றின் தரத்தினை ஆய்வு செய்ய மூன்றாம் நபர் மூலம் ஆய்வு அறிக்கை பெற்றிட ஆய்வுக்கட்டணம் ரூ.1,67,502 /- செலுத்திடக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.ண் 35871 / 2021/ SS2 நாள் 25.04.2023 ன்படி கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து உரிய கட்டணம் செலுத்தியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   ( ந.க.எண். 860 /2022 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 228 நாள்: 31.05.2023

**தீர்மானம்: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**பொருள் எண் 8**

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண் 11 தேரடி 3வது தெருவில் சாலை சேதமடைந்துள்ளதால் அப்பகுதியில் புதியதாக சிமெண்ட் சாலை அமைக்க 11 வது வார்டு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை வைத்ததை தொடர்ந்து அப்பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்திட தோராய செலவினம் ரூ. 8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்104 /2023 / அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 229 நாள்: 31.05.2023

**தீர்மானம்: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**பொருள் எண் 9**

பொன்னேரி நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவு ( Mini Indoor Fogging Machine ) சிறிய புகைபோக்கி இயந்திரம் டெங்கு தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு இந்நகராட்சியில் இல்லாததால் ( வீட்டின் உட்புறம் கொசு புகைமருந்து அடித்தல் ) 3 எண்ணிக்கை அந்த சிறிய புகைபோக்கி இயந்திரத்தை இயக்கிட கேஸ் கன்டெய்னர் 300 எண்ணம் அவசர அவசியம் கருதி வாங்கிக் கொள்ளவும் , அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு நகர்மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 563/2023/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 230 நாள்: 31.05.2023

**தீர்மானம்: அனுமதி வழங்கப்படுகிறது.**

**பொருள் எண் 10**

பொன்னேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருக்களில் நடமாடும் தெருநாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து மீண்டும் விடுவதற்கு விலைப்புள்ளி கோரியதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த Heart To Heart Vet Foundation என்ற நிறுவனத்திற்கு அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண். 324/2022 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 231 நாள்: 31.05.2023

**தீர்மானம்: அனுமதி வழங்குகிறது.**

**பொருள் எண் 11**

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி நகராட்சி எல்லைக்குள் உள்ள மீஞ்சூர் வட்டார வளர்ச்சி அலுவலக கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் பள்ளிகளை இனிவரும் காலங்களில் பள்ளி கட்டிடங்கள், சமையலறை கட்டிடங்கள் பழுதுபார்த்தல் பணி மற்றும் புதிய கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் பராமரிப்பு பணிகளை பொன்னேரி நகராட்சியின் மூலம் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் , திருவள்ளூர் அவர்கள் உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து கீழ்க்காணும் விவரப்படியான ஆரம்பப்பள்ளிகள் , நடுநிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளை ஆணையர், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித ந.க.எண் 2207/2022 /A5 நாள் **19.05.2023** ன் வாயிலாக பொன்னேரி நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எண் | பொன்னேரி நகராட்சி எல்லைக்குள் இயங்கும் பள்ளியின் விவரம் | மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | மதிய உணவு திட்டத்தின்கீழ் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி (தெற்கு) சிவன்கோயில் தெரு, பொன்னேரி | 120 | 120 |
| 2 | மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி வேண்பாக்கம் , பொன்னேரி | 43 | 43 |
| 3 | ஏ.என்.எம். பகவன் ஆரம்பப்பள்ளி , பொன்னேரி | 13 | 13 |
| 4 | மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி (வடக்கு )பாலாஜி நகர் , பொன்னேரி | 259 | 259 |
| 5 | மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சின்னக்காவணம் , பொன்னேரி | 241 | 241 |
| 6 | ஆதிதிராவிடர் நலத்துறை நடுநிலைப்பள்ளி, பொன்னேரி | 147 | 147 |
| 7 | அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பொன்னேரி | 419 | 419 |
| 8 | அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பொன்னேரி | 490 | 490 |

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 223/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 232 நாள்: 31.05.2023

**தீர்மானம் : ஒப்புதல் வழங்குகிறது.**

**பொருள் எண் 12**

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி நகராட்சியில் திருமதி . எஸ்.அனுக்கிரகா என்பவருக்கு சொந்தமான சர்வே எண் 178/3A, 3B, 3C, 180/1A1B - ல் **1.15** ஏக்கர் பரப்பில் உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் , திருவள்ளூர் மண்டலம் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி மனைப்பிரிவில் உள்ள மொத்த சாலைகள் **1708.70** ச.மீ, உள்ளாட்சிக்கு ஒதுக்கிய பகுதி **15.96** ச.மீ

தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து , மேற்படி மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் பெறுவதற்கு செலுத்தப்படவேண்டிய கட்டணங்களை செலுத்தப்பட்டுள்ளதால் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 1101 /2022 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 233 நாள்: 31.05.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

**<u>பொருள் எண் 13</u>**

பொன்னேரி நகராட்சியில் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட பொன்னேரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் உள் நோயாளிகளின் உதவியாளர்கள் தங்குவதற்கு 50 எண்ணிக்கையில் படுக்கை வசதிகளுடன் கூடிய தங்குவதற்கு சிறப்பு தங்கும் விடுதி (Special Shelter) கட்டப்பட்டுள்ளது. அக்கட்டிடத்தினை பராமரிப்பு பணி மேற்கொள்ளும் Share Trust நிறுவனம் 2020–21 ம் ஆண்டிற்கு ரூ.1,50,000 /-, 2021–22 ம் ஆண்டிற்கு ரூ.5,04,200 /- , 2022–23 ம் ஆண்டிற்கு ரூ.6,00,000 /- மொத்தம் ரூ. 12,54,200/- பராமரிப்பு பணி மேற்கொண்டமைக்கு பட்டியல் அளித்துள்ளது. இயக்கம் மற்றும் பராமரிப்பு திட்டத்தின்கீழ் அரசிடமிருந்து நிதி பெற்று மேற்படி தொகையினை வழங்கிட நகர்மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 648/2017/அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 234 நாள்: 31.05.2023

**தீர்மானம்:: அனுமதி வழங்குகிறது.**

. (ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.